**24.11.2025**

**வா.சா. 1**

**திரு தம்பி தேவேந்திரன்**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பலிபுல்லாவின் மனைவி பெயர் பஜ்ராகனி என்றால் எனக்கு ஞாபகமில்லை. கலிபுல்லாவின் மனைவி பஜ்ராகனி மற்றும் அவரது வாரிசுதாரர்கள் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய சாசனத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.5 ல் பஜ்ராகனிக்கு பதிலாக கபரோசாலி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.5 ல் கண்ட வாதி ராஜகோபால் பல்லவராயர் உயிருடுன் இருந்த காலத்தில் அ.வ.எண் 100/1990 ல் கண்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நிறைவேற்றவில்லை என்றால் சரி. மேற்படி வழக்கின் வாதி ராஜகோபால் பல்லவராயர் இறந்துவிட்டார். ராஜகோபால் பல்லவராயர் உயிருடன் இருக்கும்போது 8 ம் பிரதிவாதிக்கு ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரி. அந்த உயிலின் அடிப்படையில் ராஜதுரை நி.ம.எண் 12/2018, அ.வ.எண் 100/1990 தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிறைவேற்று மனு கலிபுல்லா

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.24 16:16:05 +0530

வாரிசுதாரர்களுக்கும் கோமளத்தம்மாள் வாரிசுதாரர்களுக்கும் எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு என்றால் தெரியாது. கோமளத்தம்மாள் வகையறா மற்றும் கலிபுல்லா வகையறாவிற்குமிடையே ஏற்பட்ட நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் அலுவலர் முன்னிலையில் வழக்கு சொத்து சம்மந்தமாக மன்னார்குடி காவல் நிலைய Cr.PC 145(1)ன்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரி. மேற்படி வழக்கில் நான் "அ" தரப்பிலும் ராஜதுரை "ஆ" தரப்பிலும் வழக்கு நடைபெற்றது என்றால் சரி. என்னிடம் காட்டப்படும் ந.க.986/2019/அ.3, நாள் 03.02.2022 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு பற்றி எனக்கு தெரியாது. சமூகம் நீதிமன்றத்தில் அ.வ.எண் 9/2021 தொடர்பு வழக்கு நிலுவையில் உள்ளதால் அந்த தீர்ப்பிற்கு உட்பட்டது என்றும் அதன் பிறகு பரிகாரம் பெற்றுக் கொள்ளும்படி தெரிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி உத்தரவு விபரம் எனக்கு தெரியும் எனவும் வழக்கு எனக்கு பாதகமாக ஆகிவிடும் என்பதால் தெரியாது என சொல்கிறேன் எனவும் சொன்னால் தவறு. மன்னார்குடி உட்கோட்ட நிர்வாக நடுவர் மற்றும் வருவாய் அலுவலரால் ப.மு.8338/2022/அ 3, நாள் 31.03.2023 தேதியில் போடப்பட்ட உத்தரவு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 8 ம் பிரதிவாதிக்கு எதிராக மன்னார்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்

SELVA
MUTHU
KUMARI

Digitally signed by
SELVA MUTHU KUMARI
Date: 2025.11.24
16:16:16 +0530

25/2019 என்னால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. இவ்வழக்கின் 1 முதல் 7 பிரதிவாதிகள் அ.வ.எண் 25/2019 ல் தரப்பினர்கள் அல்ல என்றால் சரி. அ.வ.எண் 25/2019 பிராது நகல் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிர் வழக்குரையை மட்டும் வா.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதில் எனது சித்தப்பா சிவானந்தம் தாவா சொத்து குறித்து உயில் எழுதிக் கொடுத்ததாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரி. மேற்படி வழக்கில் சிவானந்தம் எழுதி வைத்தததாக சொல்லும் உயில் மோசடியானது எனவும் நிபுணரின் கருத்துரைக்காக 8ம் பிரதிவாதி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நிபுணர் மனு அனுமதிக்கப்பட்ட பின்னர் அந்த உத்தரவின் பேரில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அ.வ.எண் 25/2019 ல் தாக்கல் செய்யப்பட்ட உயிலாவணம் வா.சா.ஆ.17 என்றால் சரி. மேற்படி வழக்கு நிலுவையில் உள்ளது. வா.சா.ஆ.17 ல் கண்ட சாட்சிகளான பொன்னையன், சக்திவேல், செந்தில்வேலன் ஆகியோரை சாட்சியாக விசாரிக்கப்பட்டது என்றால் சரி. அதில் பொன்னையன் இறந்துவிட்டார், மற்ற இருவர் உயிருடன் இருக்கிறார்கள். ஒரு வழக்கு நிலுவையில் இருக்கும்போது சாட்சிகளின் சாட்சியத்தை தாக்கல் செய்ய இயலாது என்றால் தவறு. வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.15 எனது தரப்பு சாட்சியமாக ஏற்றுக்

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2025.11.24 16:16:23 +0530

கொள்ளக்கூடியதல்ல என்றால் தவறு. வா.சா.ஆ.16 அ.வ.எண் 25/2019 ல் எனது தரப்பில் விசாரிக்கப்பட்டது என்றால் சரி. வா.சா.ஆ.16 ஏற்றுக்கொள்ளகூடியதல்ல என்றால் தவறு. 1976 ல் சிவானந்தம் வாடகைதாரர் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.17 நடைமுறைபடுத்தப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. தாவா அ மற்றும் ஆ பட்டியல் சொத்துக்கள் இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதியின் உரிமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றால் தவறு. தாவா சொத்து என் அனுபவத்தில் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் தவறு. வழக்கிற்காக உரிமையும் அனுபவமும் இல்லாத சிவானந்தத்தின் பேரில் மோசடியாக ஒரு உயிலை ஏற்படுத்திக்கொண்டு இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்ககூடியதல்ல எனவும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது எனவும் சொன்னால் தவறு. என் அனுபவத்தில் இல்லாத சொத்திற்கு விளம்புகை பரிகாரம் மற்றும் ஏகதேச உரிமையுடையது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்க கூடியதல்ல எனவும் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்ததற்கு எவ்வித வழக்கு மூலம் எழவில்லை என்ற காரணத்தினாலும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் தவறு. தாவா சொத்தில் 2 ம் பிரதிவாதிக்கு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.24 16:16:31 +0530

சொந்தமானதும் அவரது உரிமையிலும் இருந்து வருகிறது எனவும் சொத்துவரி மற்றும் மின் இணைப்பு செலுத்திவரப்படுகிறது எனவும் சொன்னால் தவறு. தாவா சொத்தில் எனக்கு சொந்தமான கடை கட்டிடம் எதுவும் கிடையாது, வாடகை கொடுக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் தவறு. வழக்க சொத்தில் எனக்கு சொந்தமான கடை கட்டிடம் உள்ளது என்பதை ஆணையர் நியமனம் செய்து பார்வையிட எனக்கு ஆட்சேபனை உள்ளது, பார்வையிட வேண்டியதில்லை. தாவா சொத்தில் எனக்கு சொந்தமான கடை கட்டிடங்கள் இல்லையென்றும் ஆணையர் நியமனம் செய்தால் அதன் உண்மை நிலை தெரிந்துவிடும் என்றால் நான் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்வதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறேன் என்றால் தவறு. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்க கூடியதல்ல எனவும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது எனவும் சொன்னால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.11.24 16:16:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.